# இலங்கையின் மனித உரிமைச் செயற்பாடுகள் ஆணையாளரால் ஐ.நாவில் வாய் மூல அறிக்கை

கொழும்பு, ஜூன் 19

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரினால், இலங்கை தொடர்பான வாய் மூல அறிக்கை சமர்ப்பிக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் புதன்கிழமை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், குறித்த அறிக்கையை சமர்ப்பிப்பார் என அறிவிக் கப்பட்டுள்ளது.

ஐ.நா.மனித உரிமை பேரவையின் 53 ஆவது அமர்வு இன்று முதல், எதிர்வரும் ஜூலை 14 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இந்த கூட்டத்தொடரிலேயே, இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமை விடயங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் ஊழல், மோசடி என்பன மனித உரிமை விடயங்களில் ஏற்படுத்திய தாக்கம் குறித்தும் அன்றைய தினம் இலங்கை நேரப்படி பிற்பகல் 3 மணிக்கு மனித உரிமைகள் ஆணையாளர் வாய் மூலமாக அறிவிக்கவுள்ளார்.


கடந்த ஆண்டு செப்டெம்பரில் இடம்பெற்ற கூட்டத்தொடரின்போது, அப்போதைய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச் லெட், இலங்கையில் மனித உரிமைகள் நிலவரம் குறித்து கடும் கரிசனையை வெளியிட்டு அறிவிக்கை ஒன்றினைத் தாக்கல் செய்திருந்தார். அத்தோடு 51/1 தீர்மா னமும் அவ்வேளையில் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 05 திங்கட்கிழமை 19.06.2023 கதிர் 06

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்



## விமலைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் அதிரடி உத்தரவு!

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இன்று பிடியாணை பிறப்பித்துள்ளது.

இன்று நீதிமன்றத்தில் அவர் முன்னிலையாகத் தவறியதன் காரணமாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்துக்கு முன்பாக வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதன் மூலம் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தினார் என்று அவருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இன்று பிடியாணை பிறப்பிக்கப் பட்டு, குறித்த வழக்கு எதிர்வரும் செப்டெம்பர் 11 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. 2

## வலி வடக்கில் விடுவிக்கப்பட்ட மக்களின் காணிகள் அளவீடு அமைச்சர் டக்ளஸ் தலைமையில் பணிகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம் - வலி வடக்கில் விடுவிக்கப்பட்ட மக்களின் காணிகளை சட்டரீதியாக விடுவிப்பதற்கான அளவீடுப் பணிகள், மயிலிட்டி பேச்சி அம்மன் ஆலயப் பிரதேசத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரசன்னத்துடன் இன்று ஆரம்பமாகியுள்ளன.



2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இராணுவத்தினரின் பயன்பாட்டிற்காக அரசுடமையாக்கும் நோக்கில் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் அடிப்படையில், அரச காணிகளிகளாக சுவிகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட சுமார் 6300 ஏக்கர் காணிகளில் கணிசமானவை தற்போது விடுவிக்கப்பட்டு காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. 2

## குருந்தூர் மலையில் ஆலயங்கள் இல்லை! முற்றுமுழுதாக நிராகரித்தார் தேரர்

முல்லைத்தீவு குருந்தி விகாரை அமைந்துள்ள இடத்தில் ஒரு காலத்தில் கோவில் இருந்ததாக அண்மைக் காலமாக கூறப்படுகின்ற போதிலும் அதில் எவ்வித உண்மையும் இல்லை, என எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதி நூறு வீதம் பௌத்த விகாரை என்பதை அகழ்வாராய்ச்சிகள் நிரூபித்துள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.



"முல்லைத்தீவில் உள்ள தமிழர்களால் குருந்தூர் மலை என்று அழைக்கப்படும் குருந்தி விகாரை ஒரு கோவில் இல்லை. மாறாக அந்த இடம் உண்மையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு பௌத்த வழிபாட்டிடம். சிலர், பொய்யான கூற்றுகளுக்க 2



## எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் விபத்து இழப்பீடு 6.4 பில்லியன் டொலர்கள்

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் விபத்தையடுத்து, கடல்சார் பேரழிவால் ஏற்பட்ட சேதம் தொடர்பான சட்ட நடவடிக்கைகளுக்காக, குழுவொன்று அடுத்த மாதம் சிங்கப்பூருக்குச் செல்லவுள்ளது என சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. 2

## கஜேந்திரகுமார் கைது வழக்கை அவதானிக்க வேண்டும்! அமெரிக்காவிடம் புலம்பெயர் அமைப்புக்கள் வேண்டுகோள்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது தொடர்பான வழக்கினை அவதானிப்பதற்கு அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன், அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த இராஜதந்திரிகளை அனுப்பவேண்டும், என நாடு கடந்த தமிழீழ அரசாங்கமும், அமெரிக்காவைத. தளமாக கொண்ட புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

அமெரிக்க இராஜாங்க செயலாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளன.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெறும் சமீபத்திய சம்பவங்கள் குறித்த எங்கள் அவதானிப்புகளுக்குத் தீர்வைக் காண்பதற்காக பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம், எனவும் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

# கோழையர்கள் என எண்ணவேண்டாம்! சுமந்திரனுக்கு அமைச்சர் விதுர பதில்



அரச சட்டத்தினை அனுசரிப்பதால் நாம் கோழையர்கள் அல்ல, என புத்தசாசன சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்த கருத்துத் தொடர்பில், பலப்பிட்டியவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அனைவரும் ஒன்றுபட்டு நிற்க வேண்டிய தருணம் வந்துள்ளது. பௌத்த மதத்திற்கும் சாசனத்திற்கும் ஒரு சவால் இருப்பதைக் காணமுடிகிறது. இந்தச் சவால் இன்று நேற்றல்ல நீண்ட காலமாக உருவாக்கப்பட்டது. எங்களை அடிக்கக் கூடிய எல்லாப் பக்கத்திலிருந்தும் அடிக்கிறார்கள். புத்த பெருமானின் போதனைகளின்படி நாம் செயல்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

நாம் செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டும். நம் நாட்டில் ஒரு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தை நாம் கடைப்பிடிக்க வேண்டும். புத்தரின் சட்டம் ஒரு பக்கம் இருந்தாலும், அரச சட்டம் மறுபக்கம் உள்ளது.

இவை இரண்டையும் மாற்றியமைக்க வேண்டும். நாம் அதை அனுசரித்துச் செல்லும்போது அதைக் கோழைத்தனம் என்று சிலர் நினைக்கிறார்கள். இல்லை! அப்படி எண்ண வேண்டாம்! சரியான நேரத்தில் செய்ய வேண்டியதைச் செய்கிறோம், எனவும் அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.




## சரா புவனேஸ்வரன் மணிவிழா யாழில் நேற்று நடைபெற்றது

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் முன்னாள் பொதுச் செயலாளர் சரா புவனேஸ்வரன் அவர்களது மணிவிழாவும் வெற்றி தேர்வு நூல் வெளியீடும் நேற்று யாழ்ப்பாணத்தில் மணிவிழா ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் வைத்திய கலாநிதி லயன். வை. தியாகராஜா தலைமையில் நடைபெற்றன.

மணிவிழாவின் நாயகனான சரா. புவனேஸ்வரன் அவர்களுக்கு "பல்துறை வித்தகர்" எனும் கௌரவ பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. தொடர்ந்து "பல்துறை நாயகன் சரா.புவனேஸ்வரன்" மணிவிழா மலரும் வெளியிடப்பட்டது.

இம்மணிவிழா நிகழ்வில் மாகாணக் கல்விப்பணிப்பாளர், முன்னை நாள் கல்விப் பணிப்பாளர்கள், அரச உயர் அதிகாரிகள், மணிவிழா நாயகனின் பழைய மாணவர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# இலங்கையில் குடும்பமொன்றின் மாதச் செலவு 76 ஆயிரம் ரூபாவைத் தாண்டியுள்ளது!

குடும்பம் ஒன்றின் மாதச் செலவு 76 ஆயிரம்ரூபாவைத்தாண்டியுள்ளதாகவும், அதில் 53 வீதம் உணவு தேவைக்காக செலவிடப்படுவதாகவும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அபிவிருத்தியின் புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என பேராதனைப் பல்கலைக்கழக பொருளாதார விஞ்ஞானம் மற்றும் புள்ளிவிபர ஆய்வுப் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள்சபையின்உணவு மற்றும் விவசாய அபிவிருத்தியின் 2023 புதிய ஆய்வறிக்கையில் வெளிப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் விபரிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இந்த வருடம் குடும்பம் ஒன்றின் மாதச் செலவு 76,124 ரூபாவாக அதிகரித்திருப்பதாக ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அபிவிருத்தியின் புதிய அறிக்கை மூலம் வெளிப்பட்டிருக்கிறது. ஆய்வு அறிக்கையின் பிரகாரம் கடந்த வருடம் இலங்கையில் குடும்பம் ஒன்றின் மாதச் செலவு 63,820 ரூபாவாக இருந்தது.

அத்துடன் மாதச் செலவில் நூற்றுக்கு 53 வீதம், அதாவது 40,632 ரூபா உணவுத் தேவைக்காக மாத்திரம் செலவிடப்படுவதோடு, எஞ்சிய நூற்றுக்கு 47 வீதம் அதாவது 35,492 ரூபா உணவு அல்லாத வேறு தேவைகளுக்காக செலவிடப்படுவதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது, என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் தனிநபர் ஒருவரின் மாதச் செலவுக்கு 13, 777 ரூபா தேவைப்படுவதாக இலங்கை மத்திய வங்கியின் 2022, 2023 அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த வருமானத்தைத் தேடிக்கொள்ள முடியாதவர்கள் வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளவர்கள் என இனங்காணப்படுவர் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவுப் பொருட்கள், ஆடைகள் போன்றவற்றின் விலை அதிகரிக்கப்பட்டமையால் நாட்டில் பணவீக்கத்தின் அதிகரிப்பும் கடந்த 3 வருடங்களில் பாரியளவில் உயர்ந்தது. அதனால், நாட்டின் மொத்தச் சனத்தொகையில் நூற்றுக்கு 14.3 வீதமானவர்கள் வறுமைக்கோட்டுக்கு கீழ் தள்ளப்பட்டிருக்கின்றனர், எனவும் இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நயினை நாகபூசணி அம்மன் கொடியேற்றம்!



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ பெருவிழா இன்றையதினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

ஆலயத்தில் இடம்பெற்ற விஷேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து வசந்தமண்டப பூஜை இடம்பெற்று கொடியேற்ற உற்சவம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து நாகபூசணி அம்பாள் பிள்ளையார் மற்றும் முருக பெருமான் சகிதம் வலம்வந்து வந்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார்.

தொடர்ச்சியாக பதினாறு தினங்கள் இடம்பெறவுள்ள திருவிழா ஜூலை 4 ஆம் திகதியன்று தெப்போற்சவத்துடன் நிறைவுபெறவுள்ளது.

## குருந்தூர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்பட்டு அந்தப் பகுதி மக்களிடையே நிலத்தை பகிர்ந்தளிக்க முயல்வது தவறு.

எனவே, தமிழ் அரசியல்வாதிகள் நிலைமையின் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு, இது தொடர்பில் அனைவருக்கும் நியாயமான உடன்பாட்டை எட்ட வேண்டும்", என பிக்கு வலியுறுத்தியுள்ளார்.

## எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த குழு, சிங்கப்பூரில் உள்ள கப்பல் நிறுவனம் மற்றும் பிற பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் எனவும் அந்தத் திணைக்களம் அறிவித்துள்ளது.

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் விபத்தினால் கடல் சுற்றுச் சூழலுக்கு ஏற்பட்ட பேரழிவின் சேதத்திற்கான இழப்பீடு 6.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் எனவும், ஜனவரி மாதம் வெளியிடப்பட்ட அறிக்கையைத் தொடர்ந்து இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## விமலைக் கைது .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2016 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளராகச் செயற்பட்ட இளவரசர் செயித் ராத் அல் /ஹுசைன் இலங்கைக்கு விஜயம் செய்தபோது, விமல் வீரவன்ச இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தார்.

## வலி வடக்கில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், குறித்த காணிகள் சட்ட ரீதியாக இப்போதும் அரச காணிகளாகவே காணப்படுகின்றமையினால், 2013 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானியை மீளப் பெறுகின்ற வகையில் புதிய வர்த்தமானி வெளியிடப்படவுள்ளது. இதற்காக குறித்த காணி அளவீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யுத்தம் காரணமாக இராணுவத் தேவைகளுக்காக அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட காணிகளை விடுவித்து காணி உரிமையாளர்களிடம் கையளிப்பதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விடுவிக்கப்பட்டபோதிலும் இந்தக் காணிகள் சட்ட ரீதியாக இப்போதும் அரச காணிகளாகவே காணப்படுகின்றமையினால், 2013 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானியை மீளப் பெறுகின்ற வகையில் புதிய வர்த்தமானி வெளியிட வேண்டியிருக்கின்றது.

இது தொடர்பாக அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் விரிவாக கலந்துரையாடிய நிலையில், குறித்த 2013 வர்த்தமானியை மீளப்பெறுவதற்கும், தற்போதும் விடுவிக்கப்படாமல் இருக்கின்ற சுமார் 2900 ஏக்கர் காணிகளில் முடிந்தளவு காணிகளை விடுவிப்பதற்கும் காணி அளவீடுகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது, என்று தெரிவித்தார்.

இரண்டு மாதங்களில் குறித்த பணிகள் நிறைவுக்கு வரும் என யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியில், ஜனாதிபதி செயற்குழாமின் பிரதானி சாகல ரத்நாயக்கா தலைமையில் இடம்பெற்ற குறித்த கூட்டத்தின் தீர்மானப்படி இன்று அளவீட்டுப் பணிகள் ஆரம்பிக்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இளங்கோவன், யாழ் மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் (காணி) முரளிதரன், நில அளவைத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர், தெல்லிப்பழைப் பிரதேச செயலர், நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட -
maalaikkathir@gmail.com

# கழிவுநீர்த் தொட்டியில் பணியாளர்களை இறக்கினால் 5 வருடச் சிறைத் தண்டனை

## நகராட்சி நிர்வாகத் துறைச் செயலர் எச்சரிக்கை

கழிவுநீர்த் தொட்டியை சுத்தம் செய்ய பணியாளர்களை இறக்கினால் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும். விதிகளை மீறினால் கழிவுநீர் லொறிகள் பறிமுதல் செய்யப்படும், என்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலர் சிவ்தாஸ் மீனா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில், மனிதக் கழிவுகளை அகற்றும் தொழில் புரிவோர் தடுப்பு மற்றும் மறுவாழ்வு சட்டம் 2013 இன்படி கழிவுநீர்த் தொட்டியை இயந்திரங்களைக் கொண்டு மட்டுமே சுத்தம் செய்ய வேண்டும்.

இச்சட்டப்படி எந்த ஒரு நபரோ, உள்ளாட்சி அமைப்போ அல்லது எந்த ஒரு நிறுவனமோ நேரடியாகவோ, மறைமுகமாகவோ எந்த ஒரு பணியாளரையும் அபாயகரமான கழிவுநீர் கட்டமைப்புகள் அல்லது கழிவுநீர்த் தொட்டிகள் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடுத்தக்கூடாது. இதை மீறுவோர் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்விதிகளை முதன்முறையாக மீறினால் 2 ஆண்டுகள் சிறை அல்லது 2 லட்சம் அபராதம் அல்லது இவ்விரண்டும் சேர்த்து விதிக்கப்படும். இரண்டாவது முறை மீறினால் 5 ஆண்டு சிறைத் தண்டனை அல்லது 5 லட்சம் அபராதம் அல்லது இவ்விரண்டும் சேர்த்து விதிக்கப்படும்.

கழிவுநீர்க் கட்டமைப்பு மற்றும் கழிவுநீர் சேகரிப்புத் தொட்டியைச் சுத்தம் செய்யும்போது உயிரிழப்பு ஏற்பட்டால் அப்பணியில் ஈடுபடுத்திய உரிமையாளர் அல்லது ஒப்பந்ததாரர் அல்லது பணியில் அமர்த்தியவர் மீது மேற்கண்ட சட்டம், இந்தியத் தண்டனைச் சட்டம் மற்றும் நடைமுறையில் உள்ள இதர சட்டப்படி குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டு, குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும். இறந்த பணியாளரின் வாரிசுதாரருக்கு இழப்பீடாக 15 லட்சம் வழங்கப்பட வேண்டும்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், சென்னை பெருநகரப்பகுதி கழிவுநீர் மேலாண்மை விதிகள்-2022, தமிழ் நாட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள்-2022 ஆகியவற்றின்படி அனைத்து கழிவுநீர் லொறிகளும், அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சென்னை குடிநீர் வாரியத்தில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து உரிமம் பெற வேண்டும்.

உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்களில் மட்டுமே கழிவுநீரை வெளியேற்ற வேண்டும். அனைத்து கழிவுநீர் லொறிகளும் முறையான பராமரிப்புடன் இருக்க வேண்டும். அவற்றின் இயக்கங்கள் ஜிபிஎஸ் கருவிகள் மூலம் கண்காணிக்கப்படும்.

பொதுமக்கள் 14420 என்ற இலவச தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு



கழிவுநீர் சுத்தம் செய்யும் சேவையை, உரிமம் பெற்ற லொறிகள் மூலம், அதற்கான கட்டணத்தை செலுத்தி பெறலாம்.

உரிமம் பெற்ற கழிவுநீர் லொறிகளை இயக்குபவர்கள், கழிவுநீர்த் தொட்டி சுத்தம் செய்யும் சேவைக்கான அழைப்புகளை மக்களிடம் இருந்தும் நேரடியாகப் பெறலாம். அவ்வாறு பெறப்பட்ட அழைப்பின் விவரங்களை 14420 என்ற எண்ணில் தொடர்புகொண்டு பதிவு செய்த பின்பு தான் கழிவுநீர்த் தொட்டியை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட வேண்டும்.

உரிமையாளர் பிரதிபலிப்பு உடை, பாதுகாப்பு கண் கண்ணாடிகள், கம்பூட்ஸ், தலைப்பட்டை, பாதுகாப்பு கையுறை மற்றும் பாதுகாப்பு முகக் கவசம் போன்றவற்றைப் பயன்படுத்தவேண்டும். இவை, லொறிகளில் எப்போதும் இருப்பதும், பணியாளர்கள் அதை அணிவதும் உறுதி செய்தல் வேண்டும்.

வாயு வெளியேற்றி மின்விசிறி பயன்பாட்டில் இருக்க வேண்டும். விதிகளை மீறும் லொறிகளுக்கு முதல்முறை 25 ஆயிரம், இரண்டாம் முறை 50 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும். தொடர்ந்து விதி மீறலில் ஈடுபடும் லொறிகளைப் பறிமுதல் செய்யவும் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது, கூறப்பட்டுள்ளது.

# காஷ்மீரில் தற்போது பிரிவினைவாதம் இல்லை இயல்பு நிலை திரும்ப பேச்சு நடத்த வேண்டும்!

## உளவுத்துறை முன்னாள் இயக்குநர் கருத்து


காஷ்மீரில் தற்போது பிரிவினைவாதம் இல்லை. அது வேண்டாத ஒன்றாகிவிட்டது. 370ஆவது சட்டப்பிரிவு போல, பிரிவினைவாதமும் மறைந்துவிட்டது. அங்கு இயல்பு நிலை திரும்ப முக்கிய அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும், என்று முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில், காஷ்மீர் விஷயத்தில் மத்திய அரசுக்கு ஆலோசகராக இருந்தவரும், உளவுத்துறை இயக்குநராகவும் பணியாற்றிய ஏ.எஸ். துலத். கூறியுள்ளார்.

ஹுரியத் மாநாட்டு கட்சி தலைவர் மிர்வாய்ஸ் உமர் பரூக் கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் வீட்டுக் காவலில் உள்ளார். அவருக்கு காஷ்மீர் அரசியலில் பங்கு உள்ளது. அதனால், காஷ்மீர் விஷயம் குறித்துப் பேச, அவர் விரைவில் வீட்டுக் காவலில் இருந்து வெளியே வர அனுமதிக்க வேண்டும். அப்போதுதான் அவரது நிலைப்பாட்டை அறிய முடியும்.

காஷ்மீரில் விரைவில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு ஆட்சிக்கு வந்தால், அது மத்திய அரசுக்கு நல்லதாக இருக்கும். இதற்குப் பேச்சுவார்த்தை ஒன்றுதான் தீர்வு. பிரிவினைவாதிகளுடன் பேசக்கூடாது என்றால், முக்கிய அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியாவது தேர்தலை நடத்த வேண்டும். அப்போதுதான் அங்கு மாநில ஆட்சியை மீண்டும் ஏற்படுத்த முடியும்.

பாகிஸ்தானில் தற்போது நிலவும் நிலைமை, காஷ்மீரில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது. ஒரு காலத்தில் பாகிஸ்தானுக்கு ஆதரவாக இருந்தவர்களே, பாகிஸ்தானில் என்ன இருக்கிறது என இப்போது கேட்கிறார்கள். ஆனால், ஜம்மு காஷ்மீரை விட்டு தீவிரவாதம் இன்னமும் முற்றாகப் போகவில்லை என்பது அடிக்கடி நடைபெறும் சம்பவங்கள் உணர்த்துகின்றன. பூஞ்ச்-ரஜோரி ஆகிய பகுதிகளில் நடந்த மோசமான சம்பவங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நான் முன்னாள் பிரதமர் வாஜ்பாயுடன் ஐந்தரை ஆண்டு காலம் பணியாற்றினேன். காஷ்மீர் மக்கள் வாஜ்பாயை இன்னும் நினைவுகூர்கின்றனர். அவருக்குப் பின் வந்த டாக்டர் மன்மோகன் சிங்கும், தன்னால் முடிந்ததை செய்தார். கடந்த 2014 ஆம் ஆண்டு பிரதமர் மோடி ஆட்சிக்கு வந்ததும், வரவேற்ற முதல்



நபர் ஹுரியத் மாநாட்டு கட்சியின் தலைவர் மிர்வாய்ஸ் உமர் பரூக்தான். பிரதமர் மோடியும் தனது பாணியில் செயல்படுகிறார். ஒவ்வொருவரும் தங்கள் வழியில் காஷ்மீர் விஷயத்தை கையாள்கின்றனர்.

இந்தியாவுடன் உறவை மேம்படுத்த பாகிஸ்தான் எதிர்பார்க்கிறது. அதற்கு சாதகமாக இந்தியாவும் செயல்படவேண்டும். இதை பிரதமர் மோடி உணர்ந்துள்ளார் என நம்புகிறேன். இந்தியாவுக்கு எதிரான தீவிரவாதம் குறைந்து வருவதால், பாகிஸ்தானுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

சமீபத்தில் குப்வாராவுக்கு அருகே 5 வெளிநாட்டு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். மோசமான தாக்குதல் எல்லாம் வடக்கில் இருந்துதான் வருகிறது. அதுதான் தீவிரவாதிகள் வரும் பழைய வழி. இதைத் தடுத்து நிறுத்த நாம் பாகிஸ்தானுடன் பேசவேண்டும். காஷ்மீர் தீவிரவாதத்தில் தலிபன் தலையீட்டுக்கு சாத்தியம் இல்லை. ஆப்கானிஸ்தானை இந்தியா அங்கீகரிக்க வேண்டும் என தலிபன் விரும்புவதால், அவர்கள் காஷ்மீர் விவகாரத்தில் தலையிட மாட்டார்கள், என்றும் ஏ.எஸ்.துலத் தெரிவித்துள்ளார்.



# பொது சிவில் சட்டத்தை எதிர்க்கிறோம் ஆனால் போராட்டம் நடத்த மாட்டோம்!

## ஜமியத் தலைவர் மதானி தகவல்

பொது சிவில் சட்டத்தை அமல்படுத்த பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இது குறித்து மத்திய சட்ட ஆணையம் பல்வேறு அமைப்புகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறது. இது 2024 மக்களவைத் தேர்தலுக்கு முன்பே அமல்படுத்தப்படலாம் என்ற தகவல் வெளியாகி உள்ளது.

இந்த நிலையில், பொது சிவில் சட்டத்தை எதிர்ப்போம். ஆனால், அதை எதிர்த்து தெருவில் இறங்கி போராட மாட்டோம், என்று ஜமியத் உலமா இ-இந்த் அமைப்பின் தலைவர் அர்ஷத் மதானி தெரிவித்துள்ளார்.

எங்கள் மதத்துக்கென தனிச் சட்டங்கள் சுமார் 1,300 ஆண்டுகளாக அமலில் உள்ளன. அதைப் பின்பற்றி நடப்போம். சுதந்திரத்துக்குப் பிறகு எந்த ஒரு அரசும் இதுபோன்ற சட்டத்தைக் கொண்டுவர முயற்சிக்கவில்லை. அது தேவையில்லை என நாங்கள் கருதுகிறோம்.

பொது சிவில் சட்டம் அமலுக்கு வந்தால் பொதுவாக போராட்டங்கள் அதிக அளவில் நடைபெறும். இந்து, முஸ்லிம் இடையே கருத்து வேறுபாடு அதிகரிக்கும். இதனால், தவறான உள்நோக்கம் கொண்டவர்களின் திட்டம் நிறைவேறும், என்று அவர் எச்சரித்திருக்கிறார்.

# கொழும்பு - யாழ் இந்துக்கல்லூரிகள் துடுப்பாட்ட - விவாதப் போட்டிகள்

## 30ஆம் திகதி கொழும்பில்





கொழும்பு இந்துக்கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிகளுக்கிடையான "இந்துக்களின் மோதல்" துடுப்பாட்டப் போட்டி மற்றும் சொல்லாடல் விவாதப் போட்டிக்குரிய புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்றைய தினம் சரவணமுத்து சர்வதேச விளையாட்டுமைதானத்தில் இரு கல்லூரி அதிபர்களாலும் மேற்கொள்ளப்பட்டது.

இவர்களோடு, கொழும்பு இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க விளையாட்டுத்துறை உப தலைவரும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் தலைவரும் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

இரு பாடசாலைகளிற்கும் இடையில் வருடாந்தம் இடம்பெறும் இப்போட்டிகள் இந்த வருடம் கொழும்பில் நடைபெற்ற உள்ளமை குறிப்பிடத்தக்கது. இம்மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமாகி இரு நாட்களாக இடம்பெறும் இந்த நிகழ்வுக்கன இரு பாடசாலை மாணவர்களும் தயாராகிவருகின்றனர்.

கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற பெட்டிகளில் இரு பாடசாலையின் பழைய மாணவர்களும் ஆர்வத்துடன் பங்குகொண்டு மாணவர்களை உற்சாகப்படுத்தியிருந்தனர்.



# கிரீஸ் படகு விபத்து 500 பேர் மாயம்

கிரீஸ் கடற்பகுதியில் மூழ்கிய புலம்பெயர்ந்தோர் படகில் இருந்து மேலும் 500 பேர் வரை காணாமல் போயுள்ளதாக ஐ.நா மனித உரிமைகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

78 பேர் உயிரிழந்த படகு விபத்தில், மாயமானவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் சிறார்கள் எனக் கூறப்படுகிறது. இந்த இழப்புக்கு காரணமானவர்களை நீதிக்கு முன் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் தற்போது வலுத்துள்ளது.

750 பேரை ஏற்றிச் சென்ற மீன்பிடிப் படகு தெற்கு கிரீஸில் உள்ள பைலோஸ் என்ற இடத்தில் இருந்து 50 கடல் மைல் தொலைவில் விபத்தில் சிக்கியது. இதில் இறந்த 78 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. இந்த விவகாரத்தில் முறையான விசாரணை முன்னெடுக்கப்படும் என கிரீஸின் தற்காலிகப் பிரதமர் ஐயோனிஸ் சர்மாஸ் உறுதியளித்துள்ளார்.

கடலோரக் காவல்படையினரால் இணைக்கப்பட்டிருந்த கயிறு காரணமாக புலம்பெயர் மக்கள் பயணித்த படகு கவிழ்ந்ததாகக் கூறப்படும் தொடர் குற்றச்சாட்டுகளை கிரேக்க அதிகாரிகள் மறுத்துள்ளனர். மேலும், விபத்தில் உயிர்பிழைத்த 104 பேரில் இருவர், கூட்ட நெரிசல் மிகுந்த படகு எப்படி நிலைகுலைந்தது என்பதை விவரித்துள்ளனர்.

ஆனால், புலம்பெயர் மக்களின் படகானது கடலோர காவல்படையினரின் படகோடு கயிறால் இணைக்கப்பட்டிருந்ததாகவும், விபத்திற்கு அதுவும் ஒரு காரணம் எனவும் அந்நாட்டு நாளேடு ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. அதாவது, புலம்பெயர் மக்களின் படகு கவிழ்வதற்கு மூன்று மணி நேரத்துக்கு முன்னர் குறித்த படகை அவதானித்து வளைத்த கிரீஸ் நாட்டு கடலோர காவல்படையினர் தமது படகோடு கயிறால் இணைத்துள்ளனர், என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விவகாரம் தொடர்பில் அரசாங்க தரப்பு, புலம்பெயர் மக்களுக்கு உதவும் பொருட்டே கடலோர காவல்படையினர் கயிறால் அந்த படகை இணைத்ததாக குறிப்பிட்டுள்ளனர். விபத்துக்கு அது காரணமல்ல எனவும் தெரிவித்துள்ளனர்.

# அயர்லாந்தில் குடியேறுவோருக்கு 92,000 அமெரிக்க டொலர் மானியம்

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான அயர்லாந்தில் குடியேறுவோருக்கு, 92,000 அமெரிக்க டொலர்கள் வரை மானியம் வழங்கப்படும் என அயர்லாந்து அரசாங்கம் அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அயர்லாந்துத் தீவுகளில் மக்கள் தொகையை அதிகரிக்கும் முயற்சிகளின் ஓர் அங்கமாக இந்தத் திட்டத்தை அந்நாடு அரசாங்கம் அறிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க விருப்பம் உள்ளவர்கள் ஜுலை முதலாம் திகதி முதல் தங்களது விருப்பத்தைத் தெரிவிக்கலாம் என அயர்லாந்து செய்தி நிறுவனங்கள் கூறியுள்ளன.

அயர்லாந்து தனது மேற்குக் கடற்பரப்பில் அமைந்துள்ள இருபதுக்கும் மேற்பட்ட அழகிய தீவுகளுக்கு புத்துயிர் அளிக்கும் விதமாகவே இந்த திட்டத்தை அறிவித்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

92,000 அமெரிக்க டொலர் வரையிலான மானியங்கள், இந்த தீவுகளில் வெறுமையாக உள்ள அல்லது பழுதடைந்த வீடுகளைப் புதுப்பிக்க விரும்புவோருக்குத்தான் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அயர்லாந்தில் சொத்துக்களை வாங்குவதற்கு எந்தத் தடையும் இல்லை என்றாலும், ஓர் இடத்தை தம் வசம் வைத்திருப்பது, அங்கு வாழ்வதற்கான அவர்களது உரிமைக்கு உத்தரவாதம் அளிக்காது என்பதையும் அங்கு குடியேற திட்டமிடும் நபர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் சில தரப்பினர் அறிவுறுத்தியுள்ளனர்.

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் தகுதிகாண் சுற்று முதல் போட்டியில் சிம்பாப்வேக்கு இலகு வெற்றி



உலகக் கிண்ணத்தின் முதலாவது தகுதிகாண் கிரிக்கெட் போட்டியில் நேபாளம் மற்றும் சிம்பாப்வே ஆகிய அணிகள் நேற்று மோதின. இந்தப் போட்டியில் சிம்பாப்வே அணி 8 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றி பெற்றுள்ளது.

போட்டியின், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதற்கமைய, முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட நேபாளம் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 290 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. குசன் பூடெல் 99, ஆசீப் செய்க் 66 ஓட்டங்களை எடுத்தனர்.

291 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பாடிய சிம்பாப்வே அணி 44.1 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. அணித்தலைவர் க்ரெய்க் எர்வின், சீன் வில்லியம்ஸ் இருவரும் ஆட்டமிழக்காது தலா 121, 102 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

# உக்ரைனின் இணையப் பாதுகாப்புத் திட்டம் 16 மில்லியன் பவுண்ட் வழங்கும் பிரித்தானியா

உக்ரைனின் இணையப் பாதுகாப்புத் திட்டத்தை ஆதரிக்கும் விதமாக 16 மில்லியன் பவுண்ட்களை பிரித்தானியா ஒதுக்கியுள்ளது.

உக்ரைன் ரஷ்யா நாடுகளுக்கு இடையிலான போர் நடவடிக்கையில், அண்மைய நாட்களில் உக்ரைனியப் படைகள் கடும் எதிர்த் தாக்குதலை முன்னெடுத்து வருகிறது.

இந்த எதிர்த் தாக்குதலில் மேற்கத்திய நாடுகளிடம் இருந்து பெறப்பட்ட ஆயுதங்களையே உக்ரைனிய வீரர்கள் பெரும்பாலும் பயன்படுத்தி வருகின்றனர்.

இதன்மூலம் உக்ரைனின் தெற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் உள்ள போர் முன்வரிசையில் உக்ரைனிய வீரர்கள் வேகமாக முன்னேறி வருகின்றனர்.

ரஷ்யாவின் போர் நடவடிக்கை தொடங்கியதில் இருந்து இதுவரை உக்ரைனுக்கு அனைத்து வகையிலும் பிரித்தானியா உறுதுணையாக நின்று வருகிறது.

நிதி உதவி, ஆயுத உதவி, வீரர்களுக்கான பயிற்சி என அனைத்துப் பிரிவிலும் உக்ரைனுக்கு பிரித்தானியா பக்கபலமாக உள்ளது.

இந்த நிலையில், உக்ரைனின் இணையப் பாதுகாப்புத் திட்டத்தை ஆதரவளிக்கும் விதமாக பிரித்தானியா 16 மில்லியன் பவுண்ட்களை ஒதுக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த உதவி, ரஷ்யத் தாக்குதலில் இருந்து உக்ரைனின் முக்கியமான உள்கட்டமைப்பு வசதிகளைப் பாதுகாக்கத் துணையாக இருக்கும் என பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பிரித்தானியப் பிரதமர் ரிஷி சுனக்கின் கூற்றுப்படி, வங்கிச் சேவை முதல் எரிசக்தி விநியோகம் வரையிலான உக்ரைனின் முக்கிய சேவைக் கட்டமைப்புகளைப் பாதுகாக்க இது உதவும் என நம்பப்படுகிறது.

அதே சமயம், ஏனைய நட்பு நாடுகளிடமிருந்து உக்ரைன் கூடுதலாக 9 மில்லியன் பவுண்ட்களைப் பெறலாம் என ரொய்ட்டர்ஸ் அறிக்கையொன்று தெரிவித்துள்ளது.

# வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என தம்பட்டம் அடிப்பது தமிழர்களுக்கு பேராபத்தை ஏற்படுத்தும்: சரத் வீரசேகர



நாட்டின் அரசமைப்பை, சட்டங்களை, நாடாளுமன்ற விதிமுறைகளை மீறி சண்டித்தனம் காட்டுவோர் கைது செய்யப்பட்டே தீருவார்கள் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

எம்மைக் கைது செய்யுங்கள் பார்ப்போம், என தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சவால் விடுவது பைத்தியக்காரத்தனம்!, எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் நாடாளுமன்றத்தில் ஒன்றையும், ஊடகங்களுக்கு முன்னிலையில் ஒன்றையும், மக்கள் முன்னிலையில் ஒன்றையும் பேசுகின்றார்கள்.

தமிழ் மக்களின் வாக்குகளால் பிரதிநிதிகளாகத் தெரிவான அவர்கள், மக்களுக்கு எந்த நன்மையையும் செய்யாது தங்கள் அரசியல் இருப்பைத் தக்கவைக்க இனவாதத்தையும் மதவாதத்தையும் கையில் எடுக்கின்றார்கள், எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முடிந்தால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைது செய்து பாருங்கள்!, என்று சவால் விடுத்திருந்தமைக்கு பதிலளிக்கும் வகையிலேயே சரத் வீரசேகர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குருந்தூர்மலை விவகாரம் உள்ளிட்ட வடக்கில் பௌத்த சிங்களவர்களுக்கு எதிராக திரும்பியுள்ள அத்தனை விடயங்களுக்கும் ஜனாதிபதி விரைந்து தீர்வு காண வேண்டும். இல்லையேல் பௌத்த - சிங்கள மக்களின் பேரெழுச்சியை எவராலும் கட்டுப்படுத்த முடியாது.

தமிழ் மக்களுக்கும் அவர்களின் பிரதிநிகளுக்கும் நாடு முழுவதும் 24 மணி நேரமும் சுதந்திரமாக நடமாடுவதற்கு முழு உரித்துண்டு. அதை அவர்கள் செய்து வருகின்றார்கள். இதே வேளை, வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்று தமிழர்கள் தம்பட்டம் அடிப்பது அவர்களுக்குத்தான் பேராபத்தாக முடியும். இது ஒற்றையாட்சி நாடு. எனவே இதை உணர்ந்து தமிழ் மக்களும், பிரதிநிதிகளும் செயற்பட வேண்டும்!

கருத்துச் சுதந்திரம் அனைவருக்கும் உண்டு. ஆனால், அதியுயர் சபைக்கும் பௌத்த சிங்கள மக்களுக்கும் சவால் விடுக்கும் வகையில் அவர்களைக் கொதிப்படையச் செய்யும் வகையில் கருத்துக்களை வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும், என சரத் வீரசேகர எச்சரித்துள்ளார்.

## இராஜாங்க அமைச்சர் பிரசன்னவின் வீட்டின் மீது மர்ம நபர்கள் தாக்குதல்!



ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான பிரசன்ன ரணவீரவுக்குச் சொந்தமான இரண்டு மாடி வீடு இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சரச்சந்திர பமுனுவில, கோனவில, டயஸ் மாவத்தை என்ற இடத்தில் அமைந்துள்ள அமைச்சரின் வீட்டின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலால் வீட்டின் எட்டு ஜன்னல்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதலின் போது வீட்டில் எவரும் இருந்திருக்கவில்லை என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.



## அதிர்ஷ்ட இலாப சீட்டுகளின் விலை இரு மடங்காக அதிகரிக்க அனுமதி!

அதிர்ஷ்ட இலாப சீட்டுகளின் விலையை அதிகரிப் பதற்கு திறைசேரியின் அனுமதி கிடைத்துள்ளதாக தேசிய லொத்தர் சபை தெரிவித்துள்ளது.

தற்போது 20 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் அதிர்ஷ்ட இலாப சீட்டு ஒன்றின் விலை 40 ரூபாவாக மாற்றப்படுவதற்கு திறைசேரி அனுமதித்துள்ளது. அத்து டன், அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்களுக்காக வழங்கப்படும் பரிசு தொகையும் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக தேசிய லொத்தர் சபை குறிப்பிட்டுள்ளது.

விலை அதிகரிப்பு அமுலுக்கு வரும் திகதி தொடர் பில் இந்த வாரத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஆயுதப் போராட்டம் முடிவுற்ற பின்னரும் பேரினவாதம் கோர முகத்தை காட்டுகிறது!




சிங்கள பௌத்த பேரினவாதத்துடன் கலக்கும் முயற்சிகளை மேலாதிக்க சக்திகள் மேற்கொள்வதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

க. பத்மநாபாவின் 33ஆவது நினைவு தினம் குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆயுதப் போராட்டம் 2009 இல் முடிவிற்குக் கொண்டுவரப்பட்ட போதும் சிங்கள பௌத்த பேரினவாதம் மீண்டும் தனது கோரமுகத்தை தமிழர்கள் மீது காட்டி வருவதாக அவர் தனது அறிக்கையில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த நிலையில் தமிழர்களின் இருப்பைத் தக்க வைத்துக்கொள்ள குறுகிய அரசியல் நலன்களைப் புறந்தள்ளி, வருங்கால சந்ததிக்காக சிறந்த சூழலை ஏற்படுத்திக்கொடுக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, அனைவரும் ஒன்றிணைந்து சர்வதேசத்தின் உதவியோடு தமிழ் இனத்தை அழிவிலிருந்து காக்க வேண்டும் என்றும் சிவசக்தி ஆனந்தன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## இலங்கையின் முதல் தமிழ் பெண் ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் காலமானார்



இலங்கையின் முதல் தமிழ் பெண் ஜனாதிபதி சட்டத்தரணியும், யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவியுமான சாந்தா அபிமன்னசிங்கம் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு (வயது -77) காலமானார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் வட மாகாணத்திற்கான தலைவராகவும் சாந்தா அபிமன்னசிங்கம் செயற்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் நீண்டகாலத் தலைவியாக இருந்த அவர், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நீதிமன்றங்களின் மேம்படுத்தல்களிலும் சட்டத்தரணிகளின் நலன்களிலும் அக்கறையுடன் செயற்பட்டிருந்தார்.

## ஐக்கிய இராச்சியத்திற்கான புதிய உயர்ஸ்தானிகரனார் போகொல்லாகம



ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கை உயர்ஸ்தானி கராக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட் டுள்ளது.

இவர், 2007 ஜனவரி முதல் 2010 ஏப்ரல் வரை வெளியுறவு அமைச்சராகப் பதவி வகித்திருந்தார். அத்துடன், 2017 ஜூலை முதல் 2018 டிசம்பர் வரை கிழக்கு மாகாண ஆளுநராகவும் சிறிது காலம் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில் மின்சாரப் பேருந்துகள்! அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது

கொழும்பில் மின்சாரப் பேருந்துகளைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

போக்குவரத்துக் கட்டண அதிகரிப்புக்குத் தீர்வாக மின்சார வாகனங்களை பொதுப் போக்குவரத்திற்கு பயன்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் பேருந்துகள், முச்சக்கரவண்டிகள், ரயில்கள் என அனைத்துப் பொதுப்போக்குவரத்து சேவைகளையும் மின்சாரத்தில் இயங்குபவையாக மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மின்சார முச்சக்கரவண்டிகள் இந்த வருடம் சந்தைக்கு வரும். மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் மின்சார முச்சக்கரவண்டிகளை பதிவு செய்யும் பணியை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது, என அமைச்சர் தெரிவித்தார்.

மின்சார வாகனங்களைப் பயன்படுத்துவதன் மூலம் எரிபொருட்களினால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைக்க முடியும் எனவும், இதேவேளை நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான நட்டத்தில் இயங்கும் டிப்போக்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

## எரிபொருளுக்குத் தட்டுப்பாடு இல்லை!

அமைச்சர் கஞ்சன தெரிவிப்பு



நாட்டில் எவ்வித எரிபொருட்களுக்கும் தட்டுப்பாடு இல்லை, என எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதன்படி, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி. எரிவாயு நிரப்பு நிலையங்களில் பெற்றோல் 95 உட்பட எந்த பெற்றோலியப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு இல்லை, என டுவிட்டர் பதிவொன்றில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் பெற்றோல் 95 ரகத்துக்கு தட்டுப்பாடு நிலவுவதாக வெளியான செய்தியைத் தொடர்ந்து அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் நாளாந்த 95 ரகப் பெற்றோலின் தேவை 80-100 மெட்ரிக் தொன் எனவும், எரிபொருள் நிலையங்களில் போதுமான அளவு இருப்புகள் உள்ளதாகவும், தொடர்ச்சியாக அனைத்து நிரப்பு நிலையங்களுக்கும் எரிபொருள் விநியோகிக்கப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 9000 மெட்ரிக் தொன் 95 ரக பெற்றோலுடன் கூடிய அடுத்த கப்பல் எதிர்வரும் ஜூன் 22 ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளதாகவும் எரிசக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.06.2023இல் வெளியிடப்பெற்றது.